# 6

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# ஒருமைப்பாட்டிற்கான ஒரே அடிப்படை

*புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் தமது போதனையில், தேவனுடைய மக்கள் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவும் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றார். கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளின் மத்தியில் பிரிவினைகள் என்பவை பாவம் நிறைந்ததாகவும், உண்மைக் கிறிஸ்தவத்தை அழிக்கக் கூடியதாகவும் உள்ளன என்பதை அறியாதிருக்கின்றவர் வேதாகமத்தின் மிகத் தெளிவான போதனையைக் காணாது விட்டுவிடுகின்றார். "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது" (சங். 133:1).*

*இயேசு தமது தந்தையிடம் பின்வருமாறு ஜெபித்தார்:*

> *நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவா. 17:20-23).*

*பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல உலகத்தில் உள்ள ஒவ்வொரு விசுவாசியும் மற்ற விசுவாசியுடன் ஒன்றாயிருக்க வேண்டும் என்ற இரட்சகரின் இந்த ஜெபமானது கிறிஸ்துவின் மக்களுடைய ஒருமைப்பாட்டின் உபதேசத்திற்கு கிறிஸ்துவை உண்மையாய் நேசிப்பவர்கள் யாவரையும் மாற்றப் போதுமானதாக இருக்க வேண்டும். இயேசுவின் ஆழம் மிகுந்த கவலையின்போது அவர் இந்த விஷயத்திற்காக ஜெபித்தார்*

*என்பது ஒவ்வொரு சீஷருக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்; சொல்லப் போனால், இது ஒவ்வொரு இருதயத்திலும் ஆர்வத்தைக் கனமுள்ளதாக்க வேண்டும். இந்த ஒருமைப்பாட்டிற்கான எஜமானரின் நோக்கத்தை ஒருவர் அறிகையில் சிறப்பாக இது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது: பிரிவினை என்ற மிக மோசமான பாவத்தைப் போல விசுவாசிகளிடையில் உள்ள வேறு எந்தப் பாவமும் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திலிருந்து இந்த உலகத்தை அவ்வளவு (அதிகமாய்த்) தடை செய்வதில்லை.*

*பவுல், "சகோதரரே, நீங்களெல்லாரும் ... ஏக மனதும் ஏக யோசனையு முள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்க வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி. 1:10) என்று எழுதினார். ஒருமைப்பாட்டிற்காகப் பரிசுத்த ஆவியானவரின் பகுதியில் இவ்வித வேண்டுகோள்களுடன், ஒரு உண்மையான ஆவி, ஒரு கீழ்ப்படிதலுள்ள இருதயம் நம் மத்தியில் இந்தப் பாவத்தை எவ்வாறு இலேசாக எடுத்துக் கொள்ள முடியும்? மற்ற சீஷருடன் ஒன்றாயிருப்பதற்காக பரிசுத்த ஆவியானவரால் அவருக்கு கட்டளையாகத் தரப்பட்டுள்ள விஷயமான எந்த ஒன்றையும் மற்றும் எல்லாவற்றையும் கூட விட்டு விடுதல் என்றுள்ளதை அவர் உணரத் தவறுவது எவ்விதம்? சொல்லப் போனால், ஒருவர் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் பிரிவினையை நிரந்தர மானதாக்கும் எந்த ஒரு நடைமுறையையும் மதத்தில் கொண்டிருக்கும் வரைக்கும் பாவம் நிறைந்துள்ள குற்ற உணர்வை உணர்ந்தாக வேண்டுமே.*

*மத உலகத்தில் இரு விஷயங்கள் பிரிவினைகளை நிரந்தரமாக்கு கின்றன. ஒன்று, பல மக்கள் - நல்ல, பக்தியான சில மக்களும் கூட - இதை ஒரு பாவமாகக் கருதாமல், இலேசாக எடுத்துக்கொண்டு, இதைப் பற்றிக் கவலைப்படாது இருக்கின்றனர். மற்றொரு காரணம் என்பது, பக்தியுள்ள அல்லது வேறு வகையில் உண்மையுள்ள இருதயம் கொண்டவர்களும் கூட இந்த மோசமான பிரிவினை உள்ளது என்பதற்காக ஆழ்ந்த வருத்தமுற்று, இந்த இடர்ப்பாட்டை, இது நிவிர்த்தி செய்யக் கூடாதபடி ஆழமாக உள்ளது என்று கருதுகின்றனர். இவ்விரண்டு குழுவினருமே நமது கர்த்தர் போதித்து கட்டளையிடுகின்றவர்களைக் கொண்டு வர எவ்வித முயற்சியை யும் மேற்கொள்ளுவதில்லை; மாறாக, ஒவ்வொரு குழுவும் தேவனுக்குக் கீழ்ப்படியாமையிலேயே தொடர்ந்துள்ளனர்.*

*இருப்பினும் சிலர் இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்காக "ஒருவனாய் ஆலையை மிதிக்க" (ஏசா. 63:3)த் தயாராக உள்ளனர். தர்சு நகரத்துச் சவுல் போல அவர்கள், "ஆண்டவரே நான் என்னசெய்யவேண்டும்?" (அப். 22:10) என்று தங்கள் இருதயங்களில் கதறுகின்றனர். அவர்கள் தங்கள் வேலையையோ அல்லது சமூக அந்தஸ்தையோ விட்டுவிட்டு, ஒரு "பார்வைப் பொருளாகவும்," "உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப் போலவும்" (1 கொரி. 4:13) ஆவதற்கு மனதாயிருக்கின்றனர். இவ்வாறு செய்வதினால் அவர்கள் தங்கள் கர்த்தரைப் பிரியப்படுத்தி, அவரது சித்தத்தைச் செய்யலாம். இவர்களுக்காக நான் எழுதுகின்றேன்.*

*நாமகரணத்துவம் நிரந்தரமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் பரிசுத்தவான்களுக்கு மத்தியில் உள்ள ஒருமைப்பாட்டின் அழகிய விளைவை ஒருக்காலும் அடைய முடியாது. இதை உற்சாகப்படுத்து கின்றவர் இயேசு எதற்காக ஜெபித்தாரோ, அந்த மகிமையான முடிவை நிறைவேற்ற ஏற்படுத்தும் முயற்சிகளுக்கானவற்றைத் தடை செய்வதையே உற்சாகப்படுத்துகின்றவராய் இருக்கின்றார். இப்படிப்பட்ட ஒருவர் மத உலகில் மாபெரும் தீமையை உற்சாகப்படுத்துகின்றார். இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்: உலகின் மிகச் சிறந்த மக்களில் சிலர் (தங்கள் இருதயத்தில்), இவ்வுலகில் கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றத் தடை செய்கின்ற விஷயங்களை இலேசாக நோக்கி, அவற்றை உற்சாகப்படுத்தி, மற்ற ஒரு சில விஷயங்கள் போலவே இதை ஆதரிக்கவும் செய்கின்றனர்.*

*நாமகரணக் கூட்ட சபைகள் யாவும் அவ்விதக் கொள்கைக்கு ''உடன்படாமல்,'' ''அவளை விட்டு வெளியே வரும்படியாகவே'' (வெளி. 18:4ஐக் காணவும்) நாம் விரும்ப முடியும், ஆனால் இந்த நிலைக்காக உண்மைத்துவ நிலையில் நாம் நம்பிக்கை கொண்டிருக்க முடியாது. நாமகரணக் கூட்டத்தின் தொடர்ந்த வளர்ச்சி நிலையைத் தடை செய்து நிறுத்துவதற்கு, அதன் தீமைகளைத் தனிப்பட்ட இருதயங்கள் காண்பதே ஒரே வழியாக உள்ளது. பிறகு அவர்கள் அதைக் கைவிட வேண்டும், மறுத்துரைக்க வேண்டும் மற்றும் அவர்கள் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் போல ஆக வேண்டும். முதல் கிறிஸ்தவர்களைப் போல கிறிஸ்தவர்களாக மட்டும் இருப்பது என்பது - போதிக்க, ஊழியம் செய்ய, ஆராதிக்க மற்றும் பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திலும் வழி நடத்த இவ்வுலகில் வந்த போது, அவர்கள் செய்யும்படி கூறியவற்றையை செய்தல் என்ற வகைகளான - பரிசுத்த ஆவியானவரின் மூலம் முழுமையாக வழிநடத்தப்படுதல் என்று அர்த்தமாகின்றது. அவர் மனிதகுலத்தில் செய்த ஊழியத்தைப் போலவே நாமும் செய்தால், நாம் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் போலவே நாமகரணத்துவமற்றவர்களாயிருப்பது என்பது உறுதி.*

*முதல் கிறிஸ்தவர்களைப் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தும் வரையிலும், அவர்கள் இரட்சிப்பின் மாபெரும் ஊழியத்தைச் செய்ய இயேசு அவர்களை அனுமதிக்காதிருந்தார். ''காத்திருங்கள்'' என்பது கட்டளையாக இருந்தது. அவர்கள் அதைச் செய்தனர். அவர் வந்தார், மற்றும் நாம் அந்த சீஷர்களுக்குள் மற்றும் அவர்களுடன் அவருடைய முதல் ஊழியத்தை ஆய்வு செய்து கொண்டுள்ளோம். இயேசு இன்றைய நாட்களில் தமது சீஷர்கள் அதே பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப் படுவதை விட, தமது முதல் சீஷர்கள் அவ்விதம் வழிநடத்தப்படுவதில் அதிகம் அக்கறையாய் இருந்தாரா? அவர்கள் (முதல் சீஷர்கள்) ஆவியானவரின் வழி நடத்துதலின்றி ஊழியம் செய்ய அவர் அனுமதிக்கா திருந்தால், இன்று நாம் அதை வழிநடத்த வந்த பொழுது செய்த ஊழியத்தை இன்றைய நாட்களில் உண்மையாகவும் இருதயத்திலிருந்தும் பின்பற்றும் ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றுகின்றார் என்பது உறுதியாகும். உண்மையில், நாம் அறிந்துள்ள வரையிலும் இது*

ஒன்றுதான் அவரால் வழிநடத்தப்படுவதற்குரிய ஒரே வழியாக உள்ளது.

அவர்களுடனான அவருடைய ஊழியம் நமக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருக்கின்றது என்ற வகையிலும், நமது ஊழியமானது இந்த தெய்வீக மாதிரிக்கு உண்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்ற வகையிலும் நாம் ஊழியத்தின் ஒவ்வொரு படிநிலையையும் மனச் சான்றுடன்/உணர்வுப்பூர்வமாகப் பரிசோதனை செய்ய வேண்டும். இந்த முதல் ஊழியமானது இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தல், கேள்விப்படுதல், நிச்சயமாய் அறிதல், மனந்திரும்புதல் மற்றும் அதன் பிறகு ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது என்று நாம் கண்டுள்ளோம். எனவே இந்த முன்மாதிரியைப் பின்பற்றுகின்றவர், இயேசுவின் உயிர்த் தெழுதலுக்குப்பின் வந்த பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவும் அவரது உரையைக் கேட்டவர்களும் செய்தது போலவே செய்கின்றார். இப்படிப் பட்ட ஒரு பிரசங்கியார், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டபடியே இயேசுவைப் பிரசங்கிக்கின்றார், தமது உரையைக் கேட்பவர்கள், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே ஆண்டவரும் கிறிஸ்துவுமா யிருக்கின்றார் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கின்றார், மற்றும் அதை அறிகிறவர்கள் யாவரும் மனந்திரும்பி தங்களின் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்படி கட்டளை யிடுகின்றார். அவர் பல்வேறு நாமகரணக் கூட்டங்களின் உபதேசத்தைப் பிரசங்கியாமல், வேதாகம உபதேசத்தை மட்டுமே பிரசங்கிக்கின்றார். இப்படிப்பட்ட ஒரு பிரசங்கியாரை எந்த ஒரு நாமகரணப் பட்டத் தினாலாவது பெயர் சூட்டி அழைத்தல் என்பது அந்த மனிதரைத் தவறாகக் குறிப்பிடுவதாகவும் மற்றும் நமது கர்த்தருடைய உபதேசத்தைத் தவறாகக் குறிப்பிடுவதுமாகவும் உள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் தெளிவான இந்த உதாரணத்துடன் இருக்கையில், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் உலகத்தை இரட்சிப் பதிலும் உண்மையுள்ள இருதயங்கள் பிரிந்திருப்பது எவ்விதம்? இந்த உதாரணம் தெளிவாக உள்ளதா? இதை நாம் பின்பற்ற முடியுமா? இது நன்கு பயணம் செய்ய பயன்பட்ட ஒரு சாலையைப் போலவே மிகத் தெளிவானதாக உள்ளது. கல்லாதவர்களும் பள்ளி செல்லாதவர்களும் இதைப் புரிந்து கொள்வதற்காக ஒரு தீர்க்கதரிசியோ, ஆசாரியரோ அல்லது பிரசங்கியாரோ இதை விளக்கப்படுத்த தேவையில்லை; வாசிக்கின்ற எவரொருவரும் புரிந்து கொள்ளுமளவு இது தெளிவானதாகவே உள்ளது. சத்தியத்தைத் தேடுகின்ற இருதயங்கள் இயேசுவின் இரத்தத்தைப்பற்றி தவறாகப் புரிந்து கொள்ளு மளவுக்கு பரிசுத்த ஆவியானவர் குழப்பமாய்ப் பேசியுள்ளார் என்பது சாத்தியமாயுள்ளதா? ஏக மனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்கும்படி இயேசு கெஞ்சி வேண்டுகோள் விடுத்துள்ள பொழுது, பரிசுத்த ஆவியானவரின் போதனையானது அவர்கள் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொருவரும் தனது குழுவை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அளவுக்குத் தெளிவற்றதாக உள்ளதா? தவறு எங்குள்ளது? இருதயங்கள் பரிசுத்த ஆவியானவரைப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அவர் போதித்துள்ளார் என்றால், நாம் ஒன்றாயிருக்கும்படிக்குப்

*பரிசுத்த ஆவியானவருடைய வேண்டுகோள்கள் வீணானவைகளாயுள்ளன என்பது உறுதி.*

*பேதுரு பிரசங்கிக்கக் கேட்ட மக்கள் ஞானஸ்நானத்திற்கு முன்பா அல்லது அதற்குப் பின்பா, எப்பொழுது இரட்சிக்கப்பட்டார்கள்? சாலையில் இவ்விடத்தில் ஒரு பிரிவு உள்ளது. இவ்விடத்தில் நல்ல மற்றும் உண்மையான இருதயங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்துள்ளன. இது அவசியமானதாக உள்ளதா? அந்த பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பெற்ற மூவாயிரம் பேர் இந்த விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களா? அல்லது அவர்கள் ஒன்றாயிருந்தார்களா? அந்தக் கூட்டம் முடிந்த பிறகு, ஞானஸ்நானத்திற்கு முன்பே இரட்சிக்கப் பட்டதாக நம்பிய ஒரு குழுவும், ஞானஸ்நானத்திற்குப் பின்பே இரட்சிக்கப் பட்டதாக நம்பிய இன்னொரு பிரிவினைக் குழுவும் அங்கிருந்ததா? இல்லை, அங்கு அவ்வாறில்லை, மற்றும் அங்கு அப்படிப்பட்ட பிரிவினை இல்லை என்பதை ஒவ்வொருவரும் அறிவார். ஏன் அவ்வாறு இல்லை? இந்த மக்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து அங்கு வந்து கூடியிருக்க வில்லையா? அவர்கள் மாறுபட்ட மொழிகளைப் பேசவில்லையா? மற்றும் அவர்கள் மாறுபட்ட செல்வாக்குகளின் கீழும் மாறுபட்ட சூழ்நிலை களிலும் வளர்ந்திருந்ததில்லையா? வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இன்றைய நாட்களில் கேட்பவர்களைப் போலவே அவர்கள் உணர்வுகள், நிலைப்பாடுகள், இல்லச் செல்வாக்குகள், மற்றும் முந்திய பயிற்சி ஆகியவற்றில் பல்வகைப்பட்டவர்களாய் இருந்ததில்லையா? அவ்வாறு இருந்த போதிலும், "பாவமன்னிப்புக்கென்று ... ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' (அப். 2:38) என்று பேதுரு கூறிய உடனேயே, அந்த மாபெரும் கூட்டத்தில் இருந்த ஒவ்வொருவரும் பேதுருவின் உரையைப் புரிந்து கொண்டனர். நாம் ஏன் புரிந்து கொள்ள முடியாது? எது வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றது? பேதுருவின் உரையினுடைய மொழிபெயர்ப்பு நம்மிடம் உள்ளதென்பது உண்மையே, ஆனால் நமது மொழிபெயர்ப்பு உண்மையானதாக உள்ளதா? பேதுருவின் கருத்துக்கள் அடங்கிய தமிழ் வார்த்தைகள் புரிந்துகொள்ள மிகவும் கடினமானவை களாய் உள்ளனவா?*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், எனது அன்பார்ந்த நண்பர்களே, அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் என்று எல்லா வேளைகளிலும் இயேசு ஜெபித்திருக்கையில், நேர்மையான இருதயமுள்ள வர்கள் "உங்கள் பாவமன்னிப்புக்கென்று" என்ற சொற்றொடரில் உள்ள "என்று" என்ற சிறு வார்த்தையைத் தப்பிதமாய் அர்த்தம் செய்து கொண்டு குழுக்களாய்ப் பிரிந்து, தேவனுடைய மக்களின் மத்தியில் கட்சிகளையும் பிரிவினைகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? "என்று" என்ற வார்த்தையானது குழப்பமற்றதாக உள்ளது என்பது உறுதி. "Unto" என்ற அந்த எளிய ஆங்கிலோ - சாக்ஸன் வார்த்தையானது கதையைக் கூறுகின்றது. இதுவே அவ்வசனப் பகுதியின் அர்த்தத்திற்குத் திறவுகோலாக உள்ளது. ஒருவர், "மத உலகில் உள்ள பிரிவினையானது 'என்று' போன்ற வார்த்தை களின் அர்த்தத்தின் மீது அல்ல ஆனால்*

*எப்பொழுது - ஞானஸ்நானத்திற்கு முன்பு அல்லது - பின்பு - நாம் இரட்சிக்கப் படுகின்றோம் என்ற கேள்வியின் மீதுதான் அதிகமாய்ப் பிரிந்துள்ளது என்பது உறுதி" என்று கூறலாம். இதுவே உண்மை என்பது மிகவும் உறுதியானது. உண்மையில், பிரிவினைக்குச் சாக்குப்போக்கு எதுவும் இருப்பதில்லை. நாம் ஒன்றாயிருக்க வேண்டுமென்ற நமது இரட்சகரின் வேண்டுகோளை நாம் முழுமையாகப் புறக்கணித்தால் மட்டுமே நாமகரணத்துவம் தொடர முடியும்.*

*இந்த மக்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று பேதுரு கூறிய பொழுது, அவர் ஞானஸ்நானத்தையும் பாவமன்னிப்பையும் ஒரு முக்கிய கருத்தமைவில் இணைத்தார். அவர் அர்த்தப்படுத்தியது என்ன? இதை நாம் அடுத்த பாடத்தில் காண்போம்.*

---

## ஒருமைப்பாடும் ஒன்றாயிருத்தலும்

*"நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப் போல ஒன்றாயிருக்கும் படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும்" (யோவா. 17:11).*

*"சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:3-6).*

*"ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக் களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" (பிலி. 2:1, 2).*